DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 570/2023

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சிவசாமி |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 26.03.2026.

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் வேப்பம்பாளையத்தில் குடியிருந்து ஆயில் கம்பெனி வைத்து வேலை செய்து வருகிறேன். கடந்த 09.10.2022ம் தேதி காலை 09.30 மணியளவில் ஆயில் டெலிவரி செய்வதற்காக எனது ஆம்னி வேனில்

கொடுமுடிக்கு சென்றுகொண்டிருந்தேன். அப்போது ஆண்டவர் நகர் அருகே கூட்டமான இருந்தது, போலிசார் நின்றிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது, விபத்து சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அதில் என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நானும் அதற்கு சம்மதித்து பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் அசோக் என்பவர் சாட்சி கையொப்பம் செய்ததாக தெரிந்து கொண்டேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் சாட்சியாக இருக்க கேட்டார்கள் கையொப்பம் செய்தேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் வெற்று தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**